1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவரது கேள்வி அதுவல்ல என்று நான் கருதுகிறேன். அவர் போட்ட கேள்வி, சேல்ஸ் டாக்சை மாற்றிவிட்டு, எக்சைஸ் டியூடி கொண்டு வருவதற்கு மத்திய சார்க்கார் ஒரு யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறது, இதைப் பற்றி இந்த அரசின் கருத்து என்னவென்று கேட்டார். இப்போது புதுக் கேள்வி போட்டிருக்கிறார். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மின் வாரிய ஊழியர்கள் இடமாற்றம்.

* வினா 444—

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மின் வாரியத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஒரு இடத்தில் மூன்று ஆண்டு காலம் நிலையாகப் பணி புரிந்த பிறகு தான் விருப்ப மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்யலாம் என ஆணை பிறப்பித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அநுபோன்ற விண்ணப்பங்களை இந்த அரசில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. மின் வாரிய பணியாளர்களை இடமாற்றம் செய்வது மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

திரு. அ. செல்லப்பா : மூன்று ஆண்டுகளுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட, கோவையைச் சார்ந்தவர்கள் தஞ்சாவூரிலும், தஞ்சையைச் சேர்ந்தவர்கள் கோவையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு : திரு. ச. இராமச்சந்திரன் மின் வாரியம் என்பது தனி அமைப்பு. அதனால் அதனுடைய தொழிலாளர்களை மாற்றுவது சம்பந்தமாக அரசு எந்தவித ஆணையும் பிறப்பிக்க முடியாது. மின் வாரியத்தில் 1976 ஆம் ஆண்டு அளவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஓரிடத்தில் பணியாற்றியவர்களை பல்வேறு

இடங்களுக்கு மாற்றினார்கள். மின் வாரியத்தில் இருக்கும் தொழிலாளர் அமைப்புகள் நிர்வாகத்தோடு பேசி ஓராண்டு அவர்கள் அப்படி வெளியூரில் தங்கியிருப்பார்களேயானால் அதற்குப் பிறகு பொது முதன்மை பட்டியல் அடிப்படையில் திரும்பவும் அவர்கள் வேண்டுகின்ற இடத்திற்குப் போடலாம் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

மின் வாரியத்தில் கண்காணிப்புப் பிரிவு.

*வினா 445—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மின் வாரியத்தில் லஞ்சக் குற்றச் சாட்டுகள், மற்றும் இதர குற்றங்களைக் கண்டுபிடிக்கச் செய்யப்பட்டுள்ள விஜிலன்ஸ் இலாகாவால் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எத்தனை ?

(ஆ) இதனால் மின் வாரியம் அடைந்த நன்மைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) (i) 1977 நவம்பர் மாதம் வரை பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை—2,224.

(ii) விசாரணைக்கு எடுத்துக் கொண்ட புகார்கள்—695

(iii) விசாரணையின் பேரில் விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்—34.

(iv) இது வரை விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்தினால் லஞ்சக் குற்றத்திற்காக பிடிபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை—9.

(ஆ) மின் வாரியத்தில் ஒழுக்கம் ஓங்கியிருக்கிறது.

திரு. வீ. கே. கோதண்டராமன் : எந்தெந்த விதமான லஞ்சக் குற்றசாட்டுகள் இன்றைக்குக் கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ? இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளில் 695 குற்றச்சாட்டுகள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் குற்றச்சாட்டுகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ?